# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAMALAR DATED 21.04.2025

## பல்கலைக்கழக துணைவேந்தர் மத்திய அமைச்சருடன் சந்திப்பு



புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை டில்லியில் சந்தித்து பேசினார்.

**புதுச்சேரி, ஏப். 21–**

புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை டில்லியில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது, பல்கலைக்கழகம் மற்றும் அதனுடன் இணைப்பு பெற்ற கல்லூரிகளில் மேற்கொள்ளப்பட்ட கல்வி முன்னேற்றங்கள், பணிகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள், பல்கலைக்கழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு தேவையான உதவிகள், வழிகாட்டுதல்கள் மற்றும் ஆதரவினை துணை வேந்தர் பிரகாஷ் பாபு, கல்வி அமைச்சரிடம் கேட்டுக் கொண்டார்.

மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு நேரில் வருகை தந்து, கல்வி திட்டங்களை நேரில் பார்வையிடவும் துணைவேந்தர் கேட்டுக் கொண்டார்.

THE HINDU DATED 21.04.2025

# Meet sheds light on historical ties between India, Southeast Asia




Dignitaries at the 'Revisiting India-Champa Heritage in Southeast Asia' conference at Pondicherry University. SPECIAL ARRANGEMENT

**The Hindu Bureau**
PUDUCHERRY

The India-Vietnam comprehensive strategic partnership would further strengthen the bilateral bonds shaped by cultural and historical influences, says former diplomat Preeti Saran.

Addressing a recent conference on 'Revisiting India-Champa Heritage in Southeast Asia', at Pondicherry University, Ms. Saran underscored the enduring cultural and

**At a recent meet, experts underscore how enduring links shape bilateral ties**

maritime links between India and Southeast Asia, through the legacy of the Champa civilisation.

The programme was organised jointly by the UGC Centre for Maritime Studies, Pondicherry University, and India Foundation, New Delhi.

Ms. Saran, a former Ambassador to Vietnam and currently a member of the governing council of India Foundation, stressed the importance of the technical assistance provided by India for the heritage site conservation at Angkor, to the tune of $2.5 million.

**'Oceanic thinking'**

Sunaina Singh, member of the Board of Trustees, India Foundation, highlighted "oceanic thinking"" and how Association of Southeast Asian Nations (ASEAN)'s development becomes crucial in the revival of the cultural heritage ties with East Asia.

A. Subramanyam Raju, Coordinator, UGC Centre for Maritime Studies, pointed out the role of maritime business in transforming India into a rising power.

G. Chandrika, Dean, School of Social Sciences and International Studies, Pondicherry University, and Shristi Pukhrem, Deputy Director (Academics and Research), India Foundation, also spoke.

THE DINAKARAN DATED 21.04.2025

# புதுவை பல்கலையில் சர்வதேச மாநாடு




புதுச்சேரி, ஏப். 21: தென் கிழக்கு ஆசியாவின் இந்தியா - சம்பா பாரம்பரியம் என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு நேற்று புதுவைப் பல்கலைக்கழகத்தில் துவங்கியது. யூஜிசி கடல்சார் ஆய்வுகளுக்கான மையம், டெல்லி இந்திய அறக்கட்டளை இணைந்து நடத்திய மாநாட்டில், கடல்சார் ஆய்வு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணியம் ராஜூ அறிமுக உரையாற்றினார்.

புதுவை பல்கலைக்கழகத்தின் சமூக அறிவியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் பள்ளியின் டீன் பேராசிரியர் சந்திரிகா, இந்திய, வியட்நாம் நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பும், இரு நாடுகளின் கலாச்சார பன்முகத் தன்மையும் எவ்வாறு ஒத்திருக்கிறது என்பது குறித்து பேசினார்.

இந்திய அறக்கட்டளையின் ஆளும் குழுவின் உறுப்பினரும், வியட்நாமுக்கான முன்னாள் இந்திய தூதருமான தூதர் பிரீத்தி சரண் கருத்துரை வழங்கினார்.

இந்தியா அறக்கட்டளையின் அறங்காவலர் குழு உறுப்பினரும், நாலந்தா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தருமான பேராசிரியர் சுனைனா சிங், ஆசிய நாடுகளுக்கும் கிழக்கு ஆசியாவுக்கும் இடையிலான பண்டைய தொடர்புகள், கடல்சார் சிந்தனையின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும், ஆசியாவின் வளர்ச்சி இரு நாடுகளுக்கும் இடையிலான இத்தகைய விலைமதிப்பற்ற கலாச்சார பாரம்பரிய உறவுகளை மீட்டெடுப்பதில் எவ்வாறு முக்கியமானது என்பதை வலியுறுத்தினார்.

பிரதமர் நரேந்திர மோடியின் ஆக்ட் ஈஸ்ட் பாலிசி மற்றும் மகா சாகர் முன்முயற்சி வளர்ச்சியின் திட்டவட்டமான அறிகுறியாகும் என்பதை அவர் எடுத்துரைத்தார். இந்தியா அறக்கட்டளையின் துணை இயக்குநர் (கல்வி மற்றும் ஆராய்ச்சி) டாக்டர் சிருஷ்டி புக்ரெம் நன்றி கூறினார்.

THILAI MAIL DATED 21.04.2025

RNI No. PONBIL/2021/82208
Email: thillaimaildaily@gmail.com
THILLAI MAIL
# தில்லை மெயில்
மலர் : 4 இதழ் : 308
VOLUME: 4 ISSUE: 308
தினசரி காலை நாளிதழ்
4 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (21-4-2025) திங்கட்கிழமை
PUDUCHERRY(21-4-2025) MONDAY
செய்திக்கு:94426 34795

SRI ANNAMALAIYAR ACTING DRIVERS
Good Driver
BEST SERVICE
D.K.Kumar
PUDUCHERRY
860 860 5550 94432 55788

புதுவையின் புகழ் பெற்ற ஸ்தாபனம்
கௌதம் ஜுவல்லரி
ஹோல்சேல் கடை
916 HALLMARK SHOWROOM

# தென்கிழக்கு ஆசியாவின் இந்தியா சம்பா பாரம்பரியம் தலைப்பில் புதுவை பல்கலைக்கழகத்தில் சர்வதேச மாநாடு




புதுச்சேரி, ஏப்.21–

"தென்கிழக்கு ஆசியாவின் இந்தியா சம்பா பாரம்பரியம்" என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு புதுவைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டது, இது யூஜிசி கடல்சார் ஆய்வுகளுக்கான மையம், புதுவை பல்கலைக்கழகம் மற்றும் இந்திய அறக்கட்டளை, புது தில்லி ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வு யூஜிசி கடல்சார் ஆய்வுகளுக்கான மையத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சுப்பிரமணியம் ராஜூவின் அறிமுக உரையுடன் தொடங்கியது. இந்தியாவை ஒரு வளர்ந்து வரும் சக்தியாக மாற்றும் கடல்சார் வணிகத்தின் பங்கையும், அது நாட்டின் வளர்ச்சிக்கு எவ்வாறு பங்களிக்கிறது என்பதையும் மலாக்கா ஜலசந்தியின் வரலாறு மற்றும் தற்போதைய புவிசார் அரசியல் முக்கியத்துவத்தையும், பிராந்தியத்தில் இந்தியாவின் பங்கையும் புரிந்துகொள்வது குறித்த தனது கருத்துக்களை அவர் பகிர்ந்து கொண்டார்.

புதுவை பல்கலைக்கழகத்தின் சமூக அறிவியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் பள்ளியின் டீன் சந்திரிகா தனது உரையில் இந்திய மற்றும் வியட்நாமிய நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பும், இரு நாடுகளின் கலாச்சார பன்முகத்தன்மையும் எவ்வாறு ஒத்திருக்கிறது என்று கூறினார்.

சம்பா நாகரிகத்தின் மரபு மூலம் இந்தியாவிற்கும் தென்கிழக்கு ஆசியாவிற்கும் இடையிலான நீடித்த கலாச்சார மற்றும் கடல்சார் தொடர்புகளை அடிக்கோடிட்டுக் காட்டி, இந்திய அறக்கட்டளையின் ஆளும் குழுவின் உறுப்பினரும், வியட்நாமுக்கான முன்னாள் இந்திய தூதருமான தூதர் பிரீத்தி சரண், முக்கிய உரையை நிகழ்த்தினார்.

மேலும் அங்கோரில் உள்ள பாரம்பரிய தளப் பாதுகாப்பிற்காக இந்தியா 2.5 மில்லியன் பேருக்கு வழங்கிய தொழில்நுட்ப உதவியின் முக்கியத்துவத்தைப் பற்றி அவர் பேசினார்.

பின்னர், இந்தியா அறக்கட்டளையின் அறங்காவலர் குழு உறுப்பினர் சுனைனா சிங் ஆசியான் நாடுகளுக்கும் கிழக்கு ஆசியாவிற்கும் இடையிலான பண்டைய தொடர்புகள் ஒரு வரமாக மாறும் இடங்களில் எடுக்கப்படும் முயற்சிகளை அவர் சுட்டிக் காட்டினார்.

இறுதியில், இந்தியா அறக்கட்டளையின் துணை இயக்குநர் (கல்வி மற்றும் ஆராய்ச்சி) டாக்டர் சிருஷ்டி புக்ரெம் நன்றி கூறினார்.

MAALAI EXPRESS DATED 21.04.2025



மாலை எக்ஸ்பிரஸ்
மாலை நாளிதழ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!

# புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் மத்திய கல்வி அமைச்சருடன் சந்திப்பு



புதுச்சேரி, ஏப். 21-

புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை டெல்லியில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது, பல்கலைக்கழகம் மற்றும் அதனுடன் இணைப்பு பெற்ற கல்லூரிகளில் மேற்கொள்ளப்பட்ட கல்வி முன்னேற்றங்கள், பணிகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள், பல்கலைக்கழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு தேவையான உதவிகள், வழிகாட்டுதல்கள் மற்றும் ஆதரவினை துணைவேந்தர் பிரகாஷ் பாபு, கல்வி அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு நேரில் வருகை தந்து, கல்வி திட்டங்களை பார்வையிடவும் துணைவேந்தர் கேட்டுக்கொண்டார்.